©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

**தமிழ்நாடு அரசு அரசிதழ்**

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண்.329] சென்னை, வெள்ளிக்கிழமை, அக்டோபார் 13, 2017

புரட்டாசி 27, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III – பிரிவு 1 (அ)

**தலைமைச் செயலக துறைகளால் வெளியிடப்பட்ட பொது சட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள்,ஆணைகள்,ஒழுங்குமுறை விதிகள், இன்னபிற.,**

### அரசின் அறிவிக்கைகள்

### வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை

தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017க்கு திருத்தம்

(அ.ஆ நிலை எண். 138, வணிக வரிகள் மற்றும் பதிவு (ஆ1), 13 அக்டோபர், 2017, புரட்டாசி 27, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048)

**எண்.எஸ்ஆர்ஓ/அ–46(இ)/2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம் 2017 (தமிழ் நாடு சட்டம் 2017–ல் 19)ன் பிரிவு 164–ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ் நாடு ஆளுநர், தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017க்கு மேலும் திருத்தம் செய்ய இதன் மூலம் பின்தொடரும் விதிகளை செய்கிறார்,அதாவது

(1) இந்த விதிகளை தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஆறாவது திருத்தம்) விதிகள், 2017 என அழைக்கலாம்.

(2) அலுவல் முறை அரசிதழில் வெளியிடப்படும் தேதியில் அவை நடைமுறைக்கு வரும்.

2. தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017ல்

(i) விதி 3–ல் உப விதி (3அ)க்காக பின்வரும் உப விதி மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

“(3அ) உப விதிகள் (1), (2) மற்றும் (3)ல் உள்ள எதுவும் எப்படி இருந்தபோதிலும் விதி 24–ன் கீழ் ஒரு தற்காலிக அடிப்படையில் பதிவு வழங்கப்பட்ட அல்லது விதி 10 உப விதி (1)ன் கீழ் பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ஒரு நபர், பிரிவு 10–ன்படி வரி செலுத்தும் விருப்பத்தினை, 2018 மார்ச் 31–ம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட வசதிசெய்யும் மையம் மூலமாகவோ, பொது வலை வாயிலில் படிவம் ஜிஎஸ்டி சிஎம்பி–02ல் ஒரு தகவலை தாக்கல் செய்ய வேண்டிய மாதத்தை உடன் தொடரும் மாதத்தின் முதல் நாளில் செயலுக்கு வருமாறு, தேர்வு செய்ய வேண்டும், மேலும், பிரிவு 10–ன்கீழ் வரி செலுத்தத் தொடங்கும் அத்தகைய நபர் அந்த நாள் முதல் தொன்னூறு நாட்கள் காலத்திற்குள் விதி 44–ன் உப விதி (4)–ன் விதிமுறைகளுக்கிணங்க படிவம் ஜிஎஸ்டி ஐடிசி–03 ல் அறிக்கை அளிக்க வேண்டும்.

இருப்பினும், கூறப்பட்ட நபர்கள் ஜிஎஸ்டி ஐடிசி–03–ல் அறிக்கை அளித்த பின்னர் படிவம் ஜிஎஸ்டி ஐடிசி–டிரான் 01–ல் உறுதிமொழி சமர்ப்பிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.”

(ii) விதி 46–க்குப் பிறகு, பின்வரும் விதி இடை சேர்க்கப்படவேண்டும், அதாவது:–

‘‘46–அ. விலைப்பட்டியலுடன் கூடிய வழங்கு சீட்டு

விதி 46 அல்லது விதி 49 அல்லது விதி 54–ல் உள்ள எதுவும் எப்படி இருந்தபோதிலும், ஒரு பதிவு பெற்ற நபர் ஒரு பதிவு பெறாத நபருக்கு வரியுள்ள மற்றும் விலக்கு அளிக்கப்பட்ட சரக்குகளையோ, சேவைகளையோ அல்லது இரண்டையுமோ வழங்குபவராயின் அத்தகைய அனைத்து வழங்கல்களுக்கும் அவர் ஒரே ஒரு “விலைப்பட்டியலுடன் கூடிய வழங்கு சீட்டு” வழங்கலாம்.”

(iii) விதி 54–ல் உப விதி (2)ல்,

(அ) ‘‘வரி விலைப்பட்டியல்’’என்ற வார்த்தைக்குப் பதிலாக, ‘‘தொகுப்பு வரி விலைப்பட்டியல்’’ என இடை சேர்க்கப்படவேண்டும்.

(ஆ) ‘‘எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும்’’ என்ற வார்த்தைக்குப் பிறகு ’’மாத இறுதியில் அந்த மாதத்தில் செய்யப்பட்ட சேவைகளின் வழங்கல்களுக்காக” என்ற வார்த்தை இடை சேர்க்கப்படவேண்டும்.

(iv)விதி 62–ல், உப விதி (1)ல், பின்வரும் காப்புரை இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது:–

“இருப்பினும் ஒரு காலாண்டின் முதல் மாதமாக இல்லாத ஒரு மாதத்தில் முதல் தேதியிலிருந்து செயலுக்கு வருமாறு பிரிவு 10–ன் கீழ் வரி செலுத்துவதற்கான விருப்பத்தினை தெரிவிக்கும் பதிவு பெற்ற நபர் பிரிவு 10–ன் கீழ் அவர் வரி செலுத்தியுள்ள காலாண்டிற்கான நமுனாவை படிவம் ஜிஎஸ்டிஆர்–4ல் அளிக்க வேண்டும் மேலும் பிரிவு 10–ன் கீழ் வரிசெலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதற்கு முன்னதாக உள்ள காலாண்டின் காலத்திற்கு அவருக்கு பொருந்தக்கூடிய வகையில் நமுனாக்களை அளிக்க வேண்டும்.”

(v) படிவம் ஜிஎஸ்டி சிஎம்பி–02ல் ‘‘விதி 3(2)ஐ பார்க்க’’ என்ற வார்த்தைகள். எண்ணிக்கைகள் மற்றும் அடைப்புக்குறிகளுக்கு ‘‘விதி 3(3) மற்றும் 3(3அ) ஐ பார்க்க’’ என

வார்த்தைகள், எண்ணிக்கைகள், அடைப்புக்குறிகள் மற்றும் எழுத்து மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

(vi) படிவம் ஜிஎஸ்டிஆர்–1ல், அட்டவணை 6க்கு பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும். அதாவது :–

“ 6. பூஜ்ய விகித வழங்கல்கள் மற்றும் ஏற்றுமதிகளாக கருதப்படுபவை

| பெறுநரின் சமசேவஅள | விலைப்பட்டியல் விவரங்கள் | | | கப்பலேற்ற சீட்டு/ ஏற்றுமதி சீட்டு | | ஒருங்கிணைந்த வரி | | | மேல் வரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலை மதிப்பு | எண் | தேதி | விகிதம் | வரிவிதிக்கத்தக்க விலை மதிப்பு | தொகை | |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. |
| 6அ. ஏற்றுமதிகள் | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| 6ஆ. சிபொம (SEZ) அலகு (அல்லது) சிபொம (SEZ) மேம்பாட்டாளருக்கு செய்யப்பட்ட வழங்கல்கள் | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| 6இ. ஏற்றுமதிகளாக கருதப்படுபவை | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | “ |

(vii) படிவம் ஜிஎஸ்டிஆர்–1அ–ல், அட்டவணை 4க்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது:–

“4. சிபொம (SEZ) மற்றும் ஏற்றுமதிகளாக கருதப்படுபவைக்கு செய்யப்பட்ட பூஜ்ஜிய விகித வழங்கல்கள்

| பெறுநரின் சமசேவஅள | விலைப்பட்டியல் விவரங்கள் | | | கப்பலேற்ற சீட்டு/ ஏற்றுமதி சீட்டு | | ஒருங்கிணைந்த வரி | | | மேல் வரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலை மதிப்பு | எண் | தேதி | விகிதம் | வரிவிதிக்கத்தக்க விலை மதிப்பு | தொகை | |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. |
| 4அ. சிபொம (SEZ) அலகு (அல்லது) சிபொம (SEZ) மேம்பாட்டாளருக்கு செய்யப்பட்ட வழங்கல்கள் | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4ஆ. ஏற்றுமதிகளாகக் கருதப்படுபவை | | | | |
| | | | | |
| | | | | |

(viii) படிவம் ஜிஎஸ்டிஆர்–4–ல், அறிவுறுத்தல் எண் 9–க்கு பிறகு பின்தொடர்பவை இடை சேர்க்கப்படவேண்டும், அதாவது:–

“10. ஜூலை 2017லிருந்து டிசம்பர் 2017–ற்கான வரி காலத்திற்காக அட்டவணை 4–ன் வரிசை எண்.4அ அளிக்கப்படமாட்டாது’’.

முனைவர் ச. சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)